மாண்புமிகு திரு. க. கலைமணி ; பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலித்து தேவையான இடங்களில் ஆவன செய்யும்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984 (ஆ இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவு,, 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு மகளிர் பல்கலைக் கழக சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்)

திருத்த சட்ட முன்வடிவு, 1984

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

THIRU K. P. PALANIAPPAN : Sir, I oppose the Bill at the introduction stage.

MR. SPEAKER : Your opposition has been recorded. You can speak tomorrow on his Bill. நாளைய தினமே இச் சட்ட முன் வடிவின் மீதான விவாதம் நடைபெறவிருப்பதால் இப்போது விரிவாகப் பேசவேண்டியதில்லை.

பேரவை முன்னுள்ள கேள்வி:

''தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.